STC.No112/2024 DW2.திருமதி.போதுமணி

தேதி– 01.07.2026

எதிரி ஆஜர் மற்றும் புகார்தாரர் ஆஜர்.

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் சின்னமனூரில் குடியிருந்து வருகிறேன். நான் பிறந்ததிலிருந்து சின்னமனூரில் தான் குடியிருந்து வருகிறேன். சுப்புராஜ் எனக்கு எவ்வளவு வருடமாக பழக்கம் என்றால் பத்து வருடமாக பழக்கம். சுப்புராஜ் எந்த ஊரில் குடியிருந்து வருகிறார் என்றால் சொக்கநாதபுரத்தில் குடியிருந்து வருகிறார். சுப்புராஜ் எந்த தெரு, எந்த வார்டு குடியிருக்கிறார் என்றால் தெரியாது. சுப்புராஜ் என்ன வேலை செய்கிறார் என்றால் வாத்தியாராக இருக்கிறார், என்று கூறினார். நான் எந்த தேதியில் பணம் வாங்கியதாக கூறுகிறேன் என்றால் எனது வீட்டில் வைத்து வாங்கினேன், மூன்று வருடத்திற்கு முன்பு பணம் வாங்கி இருந்தேன், எந்த தேதி என்று தெரியவில்லை. சுப்புராஜிடம் எங்கு வைத்து பணம் கேட்டதாக கூறுகிறேன் என்றால் அவர் எனது வீட்டிற்கு வந்தபோது பணம் கேட்டேன். சுப்புராஜிடம் முதன் முதலில் மூன்று வருடத்திற்கு முன்பு பணம் வாங்கியதாக கூறுகிறேன் என்றால் சரிதான். வட்டிக்கு பணம் வாங்கினேனா அல்லது கைமாற்றுக்காக பணம் வாங்கியதாக கூறுகிறேனா என்றால் வட்டிக்கு பணம் வாங்கினேன். என்ன வட்டிக்காக பணம் வாங்கியதாக கூறுகிறேன் என்றால் வாரவாரம் பணம் கொடுப்பதால் 7500 கொடுத்துள்ளேன். வாரத்திற்கு எவ்வளவு ரூபாய் கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் கையில் இருக்கும் 200 ரூபாய் அல்லது 300 ரூபாய் கொடுப்பேன்.

2. நான் 5000 வாங்கியதாக கூறப்படும் தொகைக்கு புகார்தாரருக்கு புரோநோட் கொடுத்தேனா என்றால் சிறு தொகைக்கு கடன் உறுதி சீட்டு வாங்கமாட்டார்கள் கையில் தான் கொடுத்தார். நான் வாங்கியதாக சொல்லப்படும் 5000/– எப்போது திருப்பி கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் மீண்டும் எங்கு வைத்து, எப்போது பத்தாயிரம் வாங்கியதாக கூறுகிறேன் என்றால் எனது வீட்டில் வைத்து பணம் வாங்கினேன். எந்த தேதியில் பணம் வாங்கினேன் என்று தெரியாது. மேற்படி பணத்தை எப்போது திருப்பி கொடுத்தேன் என்றால் நான் பணம் வாங்கிய தேதியிலிருந்து பத்து மாதத்தில் திருப்பி கொடுத்துவிட்டேன். 10

ஆயிரத்திற்கு என்ன வட்டி என்றால் பத்து ரூபாய் வட்டி ஆகும். மேற்படித் தொகைக்கு வாரம் ஆயிரம், 1500, இரண்டாயிரம், என கையில் இருக்கும் பணத்தை செலுத்தேன். சீக்கிரம் பணத்தை செலுத்துவதற்காக கையில் இருக்கும் பணத்தை கொடுப்பேன்.மேற்படி பத்தாயிரத்திற்கு என்ன ஆதாரம் கொடுத்தேன் என்றால் காசோலை கொடுத்தேன். பத்தாயிரத்தை எந்த மாதம், எந்த தேதியில் திருப்பி கொடுத்தேன் என்றால் தெரியாது. பத்து மாதம், ஒரு வருடத்திற்குள் திருப்பி கொடுத்து விட்டேன். சுப்புராஜை கடைசியாக நான் எப்போது பார்த்தேன் என்றால் இரண்டு வருடத்திற்கு மேல் இருக்கும்.

3. எதிரியின் அம்மா பெயர் பேச்சியம்மாள் என்றால் சரிதான். எதிரியின் அப்பா பெயர் தர்மர் என்றால் சரிதான். எதிரியும், அவரது அப்பா, அம்மா அனைவரும் ஒன்றாக சந்தோஷமாக இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எதிரியின் அப்பா மற்றும் அம்மா ராதாகிருஷ்ணன் ரைஸ் மில் தெரு, சின்னமனூரில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எதிரியின் காசோலையானது சின்னமனூர், சிட்டி யூனியன் வங்கி காசோலை என்றால் சரிதான். யாருடைய காசோலையை நான் கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் எனது மருமகனின் காசோலையை கொடுத்தேன். நான் கடன் வாங்கிய போது காசோலையானது எனது மருமகனின் காசோலை என்று கூறிதான் கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் சரிதான்.எதிரியும், அவரது மனைவியான எனது மகளும் ஒன்றாக தான் இருக்கிறார்கள் என்றால் சரிதான், என்னுடன் தான் அவர்களுக்கு மனக்கசப்பு உள்ளது. எதிரிக்கு தெரியாமல் எத்தனை காசோலைகள் எடுத்து வந்ததாக கூறுகிறேன் என்றால் கவரில் இருந்த ஐந்து காசோலைகளை எடுத்தேன். மேற்படி காசோலைகளை எதிரி எங்கு வைத்திருந்தார் என்றால் கட்டலுக்கு மேல் வைத்திருந்தார்.நான் காசோலை எடுத்ததாக சொல்லப்படும் விபரம் எனது மகளுக்கும் தெரியாது என்றால் சரிதான். எத்தனை காசோலை சுப்புராஜுக்கு கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் ஐந்து காசோலைகள் கொடுத்தேன். நான் காசோலையை கையொப்பம் இல்லாமலும், நிரப்பாமல்தான் சுப்புராஜிடம் கொடுத்தேன்.வேறு நபர்களிடம் நான் கடன் வாங்கி உள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றும், எனது மருமகனுக்கு ஆதரவாக வேண்டி பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எனது மருமகனும், மகளும் என்னிடம் பேசுவதில்லை.

4. எதிரியும் அவரது மனைவியும் எத்தனை வருடமாக என்னிடம் பேசுவதில்லை என்றால் இரண்டு வருடமாக பேசுவதில்லை. காசோலை காணவில்லை என்று எதிரி என்னிடம் கேட்டபோது சுப்புராஜ் தருவதாக கூறியும், அவர் தரவில்லை என்பதால் எதிரிக்கும், எனக்கும் சண்டை ஏற்பட்டது, அதிலிருந்து அவர்கள் பேசுவதில்லை. நான் பணம் கொடுத்து முடித்த பின்பு காசோலை தரவில்லை என்று சுப்புராஜ் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். சின்னமனூர் சங்கத்திலிருந்து என்னை எப்போது அழைத்தார்கள் என்றால் 20 நாட்களுக்கு முன்பு அழைத்தார்கள்.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.01 18:05:04 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam